சார்பு நீதிமன்றம், குளித்தலை

MCOP.NO.**172 / 2020**

மனுதாரர் / எதிர்மனுதாரர் **ம.சா.2**வது சாட்சி இருக்கை எழுத்தர் நிலை - II திருமதி..A.அம்சவள்ளி அவர்களால் 44/1969 பிரிவின்படி 23.09.2025ஆம் தேதியில் எடுக்கப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் : | மோகன் | கிராமம் : | |
| த/பெ : | | வட்டம் : | |
| மதம் : | | தொழில்: | |
| ஜாதி : | | வயது : | |

முதல் விசாரணை

நான் இந்த மனுவின் சாட்சி ஆவேன். எனது சாட்சியத்தை நிருபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான்.

இரண்டாவது எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

நீதிமன்றத்தில் இருந்து சாட்சியம் அளிக்க சம்மன் எதுவும் வரவில்லை. மனுதாரர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரியல்ல. விபத்தில் இறந்துபோனவர் எனக்கு தெரிந்தவர். விபத்து நடந்த சாலையானது தென்வடல் சாலையாகும். இறந்துபோனவர் வடக்கில் இருந்து தெற்கு நோக்கி வந்தார். நான் தென்வடல் சாலையில் கிழக்கு புறமாக நின்றுக்கொண்டிருந்தேன். விபத்து நடைபெற்ற இடத்தில் இருந்து நான் 50 அடி தூரம் நின்றுக்கொண்டிருந்தேன். விபத்து நடந்த இடம் நான் வசிக்கின்ற இடத்தில் இருந்து சுமார் 15 கிலோ மீட்டர் தூரம் இருக்கும். விபத்து நடைபெற்ற இடத்தில் நிறைய நபர்கள் இருந்தார்களா என்றால் இருந்தார்கள். காரின் எந்த பகுதி இருசக்கர வாகனத்தின் எந்த பகுதியில் மோதியது என்றால் காரின் இடது புறம், மற்றும் இருசக்கர வாகனத்தின் இடது ஓரத்தில் மோதியது. அதில் இருசக்கர வாகனத்தின் பம்பர், கால் பேடல், பின் பகுதி மற்றும் பின்னால் அமரும் பகுதி ஆகியவற்றி மீது மோதியது. மேற்படி சாலையானது தென்வடல் சாலையின்கிளை சாலை மேற்கு புறமாக செல்லும் சாலையாகும். பொதுவாக தென்வடல் ரோட்டின் வடக்கில் இருந்து தெற்காக வருபவர்கள் சாலையின் இடது புறமாக கிழக்கு பகுதியில் தான் வருவார்கள். மேற்கு பகுதியில் செல்லவேண்டும் என்றால் சாலையை கடந்து தான் செல்லவேண்டும். மேற்படி இறந்துபோன நபர் சாலையை கடந்த போது தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல.

மேற்படி விபத்தானது தார் சாலையில் ஏற்பட்டது. இறந்துபோனவரின் குடும்பத்திற்கு இழப்பீடு கிடைக்கவேண்டும் என்பதற்காக அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை - இல்லை.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ஒம்/- ( ஈ.முத்துசாமி)

சார்பு நீதிபதி

குளித்தலை.